# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS .No.**123/2020

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு.முகமதுகாசிம் | ஊர் | : | நடுகடை |
| த.பெ. | : | திரு.ஹ யாத்கான் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 39 | தொழில் | : | **ஆட்டோ ஓட்டுநர்** |

2026ம் ஆண்டு திங்கள் பிப்ரவரி-17ஆம் நாள் **பி.சா.3 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என முன்னிலைப்படுத்தப்படுகிறது.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

அப்துல் ஹக்கீம் 1ஆம் பிரதிவாதி எனக்கு அண்ணனா என்றால் ஆமாம். என் உடன் பிறந்தவர் வேறு உள்ளார்களா என்றால் அக்கா ஒருவர் உள்ளார். தாவா சொத்து குறித்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிரமாண வாக்குமூலத்தில் வாதிக்கும் எனது அண்ணனுக்கும் வழக்கறிஞர் மூலமாக நட்பு ஏற்பட்டதாக சொல்லுகிறேனே அவர் யார் என்றால் பார்த்துள்ளேன் பெயர் தெரியாது. வழக்கு சொத்து என் அப்பா என் அண்ணனுக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து அதன் அடிப்படையில் அவருக்கு கிடைத்தது என்றால் ஆமாம். தாவா சொத்து காலிமனையா என்றால் ஹோட்டல் உள்ளது. அதை அண்ணன் நடத்துகிறாரா என்றால் அவர் சார்பாக ஒருவர் நடத்துகிறார்.

என்அ ண்ணனுக்கும் வழக்கு போட்டவருக்கும் இடையே ஏற்பட்ட ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் வெற்று தாளில்தான் கையெழுத்து போட்டுள்ளேன். வா.சா.ஆ.2 இல் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். அதில் என்னோடு சேர்ந்து என் அப்பாவும், அம்மாவும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். என் அண்ணனும், வாதி முருகானந்தமும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. கையெழுத்து எங்கள் வீட்டில் வைத்து போட்டதா அல்லது வழக்கறிஞர் முகிலன் அலுவலகத்தில் வைத்து போட்டதா அல்லது, முருகானந்தம் வீட்டில் வைத்து போட்டதா என்றால் நான் கையெழுத்து போடவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போய் வாதி முருகானந்தத்திற்கும், அப்துல் ஹக்கீமுக்கும் இடையே ஏற்பட்ட ஆவணத்தில் என் அப்பாவும், அம்மாவும் கையெழுத்துபோட்டபோது நான் உடனிருந்தேன் என்றால் இல்லை. முருகானந்தத்திற்கும் என் அண்ணனுக்கும் வழக்கு சொத்துக்கும் என்ன சம்மந்தம் என்றால் முருகானந்தம் ஒரு வெற்றுதாளில் பதிவு அலுவலகத்தில் வைத்து கையெழுத்து கேட்டார் நான் போட்டு கொடுத்தேன். முருகானந்தத்திற்கும் என் அண்ணனுக்கும் வழக்கு சொத்து சம்மந்தமாக என்ன நடந்தது, என்ன பரிவர்த்தனை நடந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் B.A படித்தேன் என்றால் இடைநிறுத்தம். முருகானந்தத்திடம் என் அண்ணன் பணம் வாங்கி கொண்டு தாவா சொத்து அனுபவத்தை விட்டுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.17 15:56:17 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.